# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/20 - 2024 ජූලි මස 23 වැනි අඟහරුවාදා - 2024.07.23

*2394/20 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய", கட்டம்-II,
பத்தரமுல்லை,
2024, யூலை 11.


1A – PG 6784 – 19 (2024/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

ஹரலகங்வில நகர அபிவிருத்தி பிரதேசம்

*நிரல் I*

வட மத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்ட திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இலக்கம் 246 ஹரலகங்வில மேற்கு, இலக்கம் 245 ஹரலகங்வில கிழக்கு மற்றும் இலக்கம் 238 பிம்புரத்தேவ மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய திம்புலாகல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இங்கு நிரல் II இல் விபரிக்கப்படும் அதன் எல்லைகளும் குறியீடுகளினையும் கொண்டமைந்து சூழப்பட்ட முழுப் பிரதேசத்தினையும் உள்ளடங்கியதாகும்.

*நிரல் II*

**வடக்கு :**

இலக்கம் 246 ஹரலகங்வில மேற்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் இலக்கம் 247 ரத்மல்தென்ன கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லை இடதுகரை பிரதான கால்வாய் (ZD கால்வாய்) உடன் குறுக்குவெட்டும் ஆரம்பப் புள்ளியில் இருந்து இலக்கம் 246 ஹரலகங்வில மேற்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையின் ஊடாக கிழக்கு மற்றும் வடக்குத் திசையினை நோக்கிப் பயணித்து B 502 மனம்பிட்டிய-ஹரலகங்வில-மதுருஓய வீதி மற்றும் இலக்கம் 245 ஹரலகங்வில கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினை குறுக்கு வெட்டும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து இலக்கம் 245 ஹரவகங்வில கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையில் இருந்து கிழக்குத் திசையினை நோக்கி அந்தக் கிராம அலுவலர் பிரிவில் கிழக்கு எல்லையான குடா ஓய வரையாகும்.

**கிழக்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 245 ஹரலகங்வில கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லை மற்றும் குடாஓய எல்லையின் ஊடாக இலக்கம் 238 பிம்புரத்தேவ மேற்கு கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லை வரை, அந்த இடத்தில் இருந்து இலக்கம் 238, பிம்புரத்தேவ மேற்கு கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக, ஹரலகங்வில குளத்தில் அமைந்துள்ள மத்திய புள்ளிவரை.

**தெற்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து ஹரலகங்வில குளத்திற்கு மேல்பகுதி மற்றும் இலக்கம் 238 பிம்புரத்தேவ மேற்கு கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக B 502 மனம்பிட்டிய-ஹரலகங்வில-மாதுருஓய வீதியின் ஊடாக பிம்புரத்தேவ கால்வாய் வரையும், அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லை மற்றும் பிம்புரத்தேவ கால்வாய் ஊடாக வடகிழக்கு மற்றும் மேற்குத் திசையினை நோக்கிப் பயணித்து இலக்கம் 246 ஹரலகங்வில மேற்கு கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினை குறுக்குவெட்டும் இடம் வரையும், அந்த இடத்தில் இருந்து இலக்கம் 246 ஹரலகங்வில மேற்கு கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக இடது கரையின் பிரதான கால்வாயின் (ZD கால்வாய்) வரை.

**மேற்கு :**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 246 ஹரலகங்வில மேற்கு கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லை மற்றும் இடது கரையின் பிரதான கால்வாயின் (ZD கால்வாய்) ஊடாக வடக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் ஆரம்பப் புள்ளிவரை உள்ள முழுப் பிரதேசத்தினையும் உள்ளடக்கியதாகும்.

EOG 07-0212

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.